# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திரு. G. யுவராஜ், M.A., M.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2021–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 6–ஆம் நாள், திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண் 5/2016**

**(CNR No. TNSA–1300–0119–2016)**

ஆனைமுத்து, வயது 54, த/பெ. கலிய படையாச்சி,
வசிப்பது காட்டுகொட்டாய், மோட்டுர் கிழக்குகாடு,
சொக்கநாதபுரம் கிராமம் மற்றும் அஞ்சல்,
ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம். .. வாதி

எதிராக

1. மாணிக்கம், வயது 57, த/பெ. கலிய படையாச்சி,
2. செல்வராஜ், வயது 28, த/பெ. மாணிக்கம், 1 மற்றும் 2
பிரதிவாதிகள் வசிப்பது, காட்டுகொட்டாய், மோட்டுர் கிழக்குகாடு,
சொக்கநாதபுரம் கிராமம் மற்றும் அஞ்சல்,
ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம். .. பிரதிவாதிகள்

வழக்கு நாள் : 04.01.2016
வழக்கு மூலம் : 25.12.2015
அன்று சொக்கநாதபுரம் கிராமத்தில்
ஏற்பட்டது.

மொத்த வழக்கு மதிப்பு : ரூ.1,000/–
பிரிவு 27(c)–ன் கீழ் செலுத்தப்பட்ட
நீதிமன்ற கட்டணம் : ரூ.76.00
பிரிவு 27(c)–ன் கீழ் செலுத்த வேண்டிய
நீதிமன்ற கட்டணம் : ரூ.75.50
அதிகமாக செலுத்தப்பட்ட நீதிமன்ற
கட்டணம் : ரூ.0.50

பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ தாவா சொத்தை எவ்வகையிலும் துண்டித்துவிடவோ அல்லது அடைத்துவிடவோ கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

கடந்த 04.01.2016 அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அதே தினம் இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ள இவ்வழக்கின் மீதான விசாரணையானது கடந்த 19.08.2021 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. A. வடிவேல் அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. கண்ணன் அவர்கள் ஆஜராகியும், பின்னிட்டு வழக்கு விசாரணையின்போது பிரதிவாதிகள் ஆஜராகாததால் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், வாதி தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## <u>தீர்ப்பாணை</u>

| | |
|---|---|
| 1. | இறுதியாக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது அனுமதிக்கப்படுகிறது. |
| 2. | முடிவில், தாவா சொத்தான பொது வண்டித்தடத்தை வாதியும், அவரது குடும்பத்தினரும் பயன்படுத்தி வருவதற்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில், பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, யாரும் எந்த வகையிலும் தாவா பொது வண்டித்தடத்தை துண்டிக்கவோ அல்லது அடைத்துவிடவோ கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகின்றது. |
| 3. | செலவுத் தொகை இல்லை. |

**செலவுப்பட்டியல்**

| | வாதி<br>ரூ. | பிரதிவாதிகள்<br>ரூ. |
|---|---|---|
| பிராது ஸ்டாம்பு | 75.50 | செலவுப் பட்டியல் தாக்கல் இல்லை |
| வக்காலத்து நாமா ஸ்டாம்பு | 5.00 | |
| தஸ்தாவேசுகளுக்கு ஸ்டாம்பு | 25.00 | |
| வக்கீல் பீஸ் மூத்த வழக்கறிஞர் | 500.00 | |
| வக்கீல் பீஸ் இளைய வழக்கறிஞர் | 150.00 | |
| புரோசஸ் கட்டணம் | 20.25 | |
| விண்ணப்ப செலவு | 100.00 | |
| நகல் செலவு | 100.00 | |
| எழுத்துக்கூலி | 100.00 | |
| **மொத்தம்** | **1075.75** | |

## DESCRIPTION OF PROPERTY

The Cart-track bearing S. No. 172/1B measuring 0.05 acres shown as “ A B C D ” in the Plaint Rough Plan and being enjoyed as Common Cart-track of the Plaintiff and the defendants and their families only situated at sokkanathapuram Village, Attur Taluk, Salem District.

06.09.2021–ம் நாளன்று எனது கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(Sd/–. G. யுவராஜ்)**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

ஆத்தூர்.

**PARTICULARS OF IMMOVABLE PROPERTY**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR.**

**O.S. No. 5/2016**

Anaimuthu .. Plaintiff

Vs.

1. Manickam
2. Selvaraj .. Defendants

**Valuation of immovable property for Purpose of court fees.**

| *Section and sub section of the Act* | *Nature of suit* | *Annual revenue of rent payable* | *Market value Rs. P.* | *Value for purpose of court fees Rs. P.* |
|---|---|---|---|---|
| U/s. 27(c) of TNCF Act | Permanent Injunction | -- | 1,000 | 75.50 |
| | **Total** | **–** | **1,000** | **75.50** |

Sd/- .........
Counsel for the Plaintiff

/ By order / True copy /
(Sd/-)
SUPERINTENDENT